3. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இன்றைக்கு இல்லை. (குறுக்கீடுகள்) இப்போது பேரவைமுன் உள்ள அலுவல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிய வேண்டும். தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது:

"மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்று கொடுத்திருக்கிறார்கள். தீர்மானத்திற்கான அறிவிப்பைக் கொடுத்தவர்கள், திருவாளர்கள் ஒ. பன்னீர்செல்வம், டி. ஜெயக்குமார். பேரவை விதி 70(1)-ன்கீழ், இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதியளிக்க வேண்டும். எனவே, பேரவை அனுமதியளிக்கிறதா என்பதை அறிய இத்தீர்மானத்திற்கு இசைவளிக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் இருக்கையிலிருந்து எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

உட்காருங்கள். 35-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் இசைவளித்து, ஆதரவாக எழுந்து நிற்பதால், இத்தீர்மானத்தை எடுத்துக்கொள்ள பேரவை அனுமதி அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே 27-4-2007 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவிற்கிணங்க, இத்தீர்மானம், 14-5-2007 அன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.